மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லாவரம்.

**O.S No.602 /2023**

**in**

**Old No.808/2015**

**DW 1**

இந்நீதிமன்றத்தில் Gr-III பெஞ்ச் கிளார்க் திரு.பூபதி அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகளின் வாக்குமூலம் 1973ஆம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைக்கு உட்பட்டு இன்று 2023ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ஆம் நாள் என்னால் பதிவு செய்யப்பட்டது.

பெயர் : Panneerselvam மதம்:

தந்தை / கணவர் பெயர். : திரு. Namachivayam ஊர் :

வயது :

தொழில் :

இனம் :

கிராமம் :

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு சொத்து எனது அப்பா உயிருடன் இருந்த காலத்திலிருந்து அனைவரும் அனுபவித்து வந்த சொத்தாகும். வழக்கு சொத்தில் அனைவரும் ஒன்றாக அந்த வீட்டில் வசித்து வந்தோம். வழக்கு சொத்து ஆதியில் அரசு புறபோக்கு நிலமாக இருந்து வந்தது என்றால் ஆம். அதன் பின்பு கிராம நத்தம் நிலமாக நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அரசாங்கத்தால் அந்த நிலத்தில் வசித்து வருபவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு சொத்திற்கு பட்டா எனது அப்பா பெயரிலும், எனது பெயரிலும், வாதி பெயரிலும் மற்றொரு தம்பி அருள் என்பவர் பெயரிலும் வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நானும் எனது சகோதரி பிரமிளா என்பவரும் ஒரே வீட்டில் வசித்து வருகிறோம். எனக்கு திருமணம் ஆகி விட்டது. எனக்கு திருமணம் ஆகி விட்டது எனது மனைவியுடன் வசிக்கவில்லை. எனது தங்கை பிரமிளா மற்றும் எனது தாயார் உயிருடன் இருக்கும் போது மூவரும் அந்த வீட்டில் வசித்து வந்தோம். நானும் எனது தம்பி அருள் என்பவரும் வழக்கின் வாதி எனது சகோதரர் பென்னிராஜா என்பவருக்கு வா.சா.ஆ.2 மூலம் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தோம் என்றால் ஆம். வாசாஆ 2ல் வீடுயிடன் மின் இணைப்பு மற்றும் இதர வசதிகளை பாகம் பிரிக்கப்படாத 3ல் 2 பங்கை செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளோம் என்றால் அது பற்றி தெரியாது. வழக்கு சொத்தில் வீடு வாதியால் 2007 ஆண்டில் கட்டப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி தெரியாது. மின் இணைப்பு கட்டணம் மற்றும் வீட்டு வரியினை வாதி செலுத்தி வருகிறார் என்றால் தெரியாது.

வாதிக்கு எழுதிக்கொடுத்த தான செண்டில்மெண்டை எதன் அடிப்படையில் ரத்து செய்தோம் என்றால் எனது அம்மா சொத்து என்பதால் ரத்து செய்தோம். தாவா சொத்து எனது தாயாருக்கு சொந்தமானது என்று ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நீதிமன்ற உத்தரவு உள்ளது. எந்த உத்தரவு என்றால் அது பற்றி தெரியாது.எனது தங்கை பிரமிளா தாவா சொத்தினை தனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்துக்கொண்டார் என்றால் அது பற்றி தெரியாது. எனவே வாதி வட்டாட்சியர் அலுவகத்தில் பிரமிளா பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ள பட்டா செல்லாது என்றும் மீண்டும் அவர் பெயரில் பட்டா வழங்க மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. அதனால் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு மீது உத்தரவு பிறபிக்காததால் உயர் நீதிமன்றத்தில் வாதி மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. அதன் அடிப்படையில் பிரமிளா வழங்கப்பட்ட பட்டா செல்லாது என்று உயர் நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டடு அதன் பெயரில் அனைவரையும் விசாரணை செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது.

வாதி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நீதிபேராணை மனு எண். 29580/2014 என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அதன் பேரில் அனைவரையும் விசாரணை மேற்கொண்டு வாதி சான்றாவணம் 3 மூலம் வட்டாட்சியரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி தெரியாது. மேற்படி உத்தரவினை நான் 6வது நபராக வாங்கியுள்ளேன் என்றால் இல்லை. வா.சா.ஆ 3யை எதிர்த்து மேற் முறையீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி குறிப்பிட்டுள்ள உத்தரவு பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ 3 உத்தரவில் நான் சாட்சி சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது. மேற்படி பிரமிளா உத்தரவு பெற்றுள்ளதால் எந்த விவரமும் எனக்கு தெரியாது. எனக்கு சார்பாக பிரமிளா வழக்கை நடத்தி வருகிறார் என்றால் இல்லை விவரங்கள் தெரியாது.

பிரமிளா என் தங்கை என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. அந்த வழக்கில் நான் நீதிமன்றத்திற்கு வராததால் எனக்கு எதிராக ஒரு தலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி வழக்கினை வாதி பென்னிராஜ் மற்றும் அருள் என்பவர் நடத்தி வருகிறார்கள் என்றால் தெரியாது. அருள்ராஜ் என்பவரும் இவ்வழக்கின் வாதியும் ஆலந்தூர் சார்புஅ நீதிமன்றத்தில் பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது. அந்த பாக பிரிவினை வழக்கு நான் முதலாம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி பாக பிரிவினை வழக்கிலும் அழைப்பாணை பெற்று நீதிமன்றத்திற்கு வராததால் ஒரு தலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது அதை பற்றி எதுவும் தெரியாது எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை.

மேற்படி இரண்டு வழக்கிலும் அழைப்பாணை பெற்றுள்ளதா வழக்கு கோப்பில் ஆவணம் உள்ளது என்றால் தெரியாது. எந்த வழக்கு விவரங்களையும் கூறாமல் பிரமிளா என்பவர் தான் எனது சார்பாக வழக்கு நடத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரமிளா

வட்டாட்சியர் அலுவலகத்தில் வழங்கிய பட்டாவை பழைய நிலைமைக்கு மாற்றிக்கொண்டார் என்றால் அதை பற்றி தெரியாது. வா.சாஆ3 ல் எனது தாயாருக்கு சொத்தில் உரிமையில்லை என்றும் அவர் பிரமிளா என்பவருக்கு தான செண்டில்மெண்ட் செல்லாது என்று உத்தரவு பிறபிக்கப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி தெரியாது. எனவே தான செண்டில்மெண்ட் அடிப்படையில் எனது தாயார் பிரமிளா பெயருக்கு எழுதி வைத்துள்ள செண்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல.

வா.சாஆ 3 ல் பிரமிளா பெயருக்கு வழங்கிய பட்டா ரத்து செய்யப்பட்டுள்ளது என்று உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி உத்தரவு அடிப்டையில் வாதி, பிரதிவாதி மற்றும் எனது தகப்பனார் பெயரில், அருள்ராஜ் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. எனது தகப்பனார் இறந்த பிறகு எனது சகோதரிகளுக்கு தகப்பனார் சொத்தில் உரிமையுள்ளது என்பதால் வழங்கிய பட்டாவில் சகோதரிகள் பெயர்களும் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது.

நான் எனது பதிலுறையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் அரசு புறம்போக்கு நிலம் என்பதால் வாதிக்கு உரிமையில்லை என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ4ல் வழக்கு சொத்து அம்மாவின் சொத்து என்பதால் தான செண்டில்மெண்டை ரத்து செய்துவிட்டேன் என்றால் ஆம். வா.ச.ஆ4யை ரத்து செய்வதற்கு முன்பு பின்போ வாதிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி செண்டில்மெண்ட் பத்திரத்தை தாமாகவே ரத்து செய்ய உட்பட்டுள்ளோம் என்றால் ஆம். அவ்வாறு அது செல்லாது என்றால் ஆம். மேற்படி செண்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய நீதிமன்றத்தில் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

எனது தங்கை பிரமிளா நான் எழுதிக்கொடுத்த தான செண்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி சொத்திற்கு பிரமிளா தான் உரிமையாளர் என்பதால் நான் எழுதிக்கொடுத்த செண்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. தான செண்டில்மெண்ட் நானும் அருள்ராஜ் சேர்ந்து வாதிக்கு எழுதி வைத்துவிட்டு ஆனால் ரத்து செய்ய அருள்ராஜ்க்கு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் ஆம்.

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx

District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.